53

ஹரி:

குருநாதன்றுணை.

கோவைநகர் ஸ்ரீ சண்முகானந்த குரு சாமிகளின்மீது

தோத்திரப்பாமாலை.

இவை

பாலைக்காடு நூரணியில் வசிக்கும் சிவராம நாமாமிர்த பஜனைச்சங்க

உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ

மா. நாராயணசாமி பிள்ளையவர்களால்

இயற்றிய

பண்ணிசைத் தேவாரங்களும்

கோவைநகர் மகா-ா-ஸ்ரீ பொ. தாசேகவுடர் குமாரரும் ஷை சண்முகானந்த

குரு சாமிகளின் மாணாக்கருள் ஒருவருமாகிய

நாராயணகவுடரவர்களால்

ஷை குரு சாமிகளின் மீது இயற்றிய

கீர்த்தனங்களும்

கோவைநகர் இலண்டன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் மகா-ா-ஸ்ரீ

சொக்கலிங்கம் பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

ஷை சண்முகானந்த குரு சாமிகளின் மாணாக்கர் மகா-ா-ஸ்ரீ

அ. வெள்ளிங்கிரிக் கவுண்டரவர்கள்

வேண்டுகோளின்படி

...த்தூர் கிருஷ்ண விலாச அச்சுக்கூடத்திற்

... பதிப்பிக்கப்பட்டது.

[...ரோதிகிருது-ஞு ... ங்குனி-மீ.]

Q26:38,2118.
N12
120421

ஹரி:

குருநாதன்றுணை.

கோவைநகர் ஸ்ரீ சண்முகானந்த குரு சாமிகளின்மீது

தோத்திரப்பாமாலை.

இவை

பாலக்காடு நூரணியில் வசிக்கும் சிவராம நாமாமிர்த பஜனைச்சங்க

உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ

மா. நாராயணசாமி பிள்ளையவர்களால்

இயற்றிய

பண்ணிசைத் தேவாரங்களும்

கோவைநகர் மகா-ள-ஸ்ரீ பொ. தாசேகவுடர் குமாரரும் ஷை சண்முகானந்த

குரு சாமிகளின் மாணுக்கருள் ஒருவருமாகிய

நாராயணகவுடரவர்களால்

ஷை குரு சாமிகளின் மீது இயற்றிய

கீர்த்தனங்களும்

கோவைநகர் இலண்டன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் மகா-ள-ஸ்ரீ

சொக்கலிங்கம் பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

ஷை சண்முகானந்த குரு சாமிகளின் மாணுக்கர் மகா-ள-ஸ்ரீ

அ. வெள்ளிங்கிரிக் கவுண்டரவர்கள்

வேண்டுகோளின்படி

கோயமுத்தூர் கிருஷ்ண விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

[விரோதிகிருது-ஸ்ரீ பங்குனி-மீ.]

கோவைநகர் லண்டன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்
மகா-ள-ள-ஸ்ரீ சோக்கலிங்கம் பிள்ளையவர்கள் இயற்றிய

சாத்துக்கவி.

பாகம்பெண் ணுருவான பரம்பரனை யநுதினமும் பரவி மும்மை
மோகங்கள் கழன்றுசிவ யோகங்கள் பயில்சிவசண் முகயோ கன்சீர்
பாகங்கொள் விருத்தமதாற் பண்ணதனாற் பாடினனம் பாலைக் காட்டு
ளேகங்கொள் மாரியப்பன் சேய்நாரா யணசாமி யெனுநம் மன்பன்.

ஆசையெலாந் துறந்தவதி வீரன்சிவ சண்முகன்றன் னருமை யாவுந்
தேசுபெற வமுதுநிகர் செந்தமிழிற் கீர்த்தனமாச் செப்பி னானவ்
வீசுபுகள்ச் சண்முகனார் மாணாக்கன் மிளிர்கோவை மேவி வாள்வோன்
தாசையன்பெற் றிடுநாரா யணக்கவுட ரெனுநலபி தானத் தானே.

காப்பு.

சீரோங்குஞ் சிவகுமரன் றிருத்தாளை மறவாத தியான சித்தன்
ஏரோங்குந் திருமுடிசற் குருவருளா லவதரித்த வேந்த லென்னும்
பாரோங்குஞ் சண்முகவா னந்தரின்மேல் பாமாலை பரிந்து சாற்ற
நீரோங்கும் மதிச்சடைஐங் கரன் சரண மென்னாளு நினைந்து வாழ்வாம்.

அடியார்கள் வணக்கம்.

அப்பர்சுந் தரர்வாத வூரர்சம் பந்தர்முத லறுபான் மும்மைச்
செப்பரிய திருத்தொண்டர் திருவடித்தா மரையுளத்தே தியானித் தன்பாய்
ஒப்பிலாச் சண்முகத்தே சிகன்மீதிற் பாமாலை யுகந்து பாடத்
தப்பிதமெ லாந்தவிர்த்திங் கருள்சுரக்குந் திருமுடிச்சா மிகள்தாள் போற்றி.

பத்தனாய்ப் பாடமாட்டேன் என்கிற சந்தம்.

திருமுடிக் குருவின் சேயாய்ச் செகத்தில்வந் துதித்த வித்தே
கருவடி வெடுத்தின் னாளாய்க் காலம்வீண் கழித்த வெற்குக்
குருவடி வுடைத்த வையன் குறைவிலா வருளை நல்கி
மருவடி வகற்றி யாண்ட மௌனசண் முகமெய்த் தேவே. 1

அலைகடற் றுரும்பு போலென் ஐம்புல னலைப்பட் டோனைக்
கலைபல வுணர்த்தி நாயேன் கதிபெறும் வழியீ தென்றே
நிலையுறு மருளுன் னாட்டிநிஷ்கள முற்ற ஜோதி
மலைவினைத் தோற்ற வைத்த மௌனசண் முகமெய்த் தேவே. 2

அனித்திய மூலக வாழ்வென் றனுவள வேனு மென்றன்
மனத்தினில் நினைத்தி டாமல் மனைமக்கள் மகிழ்வி லாழ்ந்தே
வினைத்துயர் விளைவித் தின்னாள் வீணனென் றுழன்ற வெற்கு
வனப்பறுக் கருணை கூர்ந்த மௌனசண் முகமெய்த் தேவே. 3

உப்புமண் பாண்டங் காற்று லாதிய தருத்தி பஞ்சால்
ரப்பிய பொதிசெந் நீரும் நரம்பு தோல் தசையின் கூட்டை
அப்பனே சதமென் றெண்ணி யானநா ளறிந்திடாத
மப்பினே னெனையவந் தாண்ட மௌனசண் முகமெய்த் தேவே. 4

சரியையுங் கிரியை யோக ஞானமும் மறிகி லாத
வெரியனேன் றனக்கி ரங்கி விளங்கொளிச் சொரூபந் தோற்றப்
பிரியமா யுபதே சித்த பெரியசற் குருவென் னுதா
மருவிலாப் பரமா னந்த மௌனசண் முகமெய்த் தேவே. 5

மஞ்சள் வார் முலையி னுக்கும் மதிபொளிர் வதனத் திற்கும்
வஞ்சமை விழியல் குற்கும் மாதர்பாழ் வலையிற் பட்டே
பஞ்சபா தகனை மீட்டுப் பதந்தர லெந்த நாளோ
வஞ்சினங் கடிந்த சீர்சால் மௌனசண் முகமெய்த் தேவே. 6

இருசது ரொன்று பத்து மேகமா யொடுங்கும் போது
வெருவிடுங் கால பாச வினையெனை யணுகா வண்ணந்
திருவடிச் சேவை காட்டிச் சிவமய வுருவ தாக்க
வருகநற் சமய மையா மௌனசண் முகமெய்த் தேவே. 7

தந்தை நீ தாயும் நீயே தமரும் நீ துணையும் நீயே
பந்தம் நீ பற்றும் நீயே பரமசற் குருவும் நீயே
சொந்தம் நீ தூயன் நீயே சொற் பொரு ளெல்லாம் நீயே
வந்தெனக் கருள் நீ யின்றே மௌனசண் முகமெய்த் தேவே. 8

தரணியில் நினது சீடர் தனிப்பெரும் பதவி சாரப்
பரமசற் குருவாய்த் தோன்றிப் பக்தியின் பத்தை யூட்டிப்
பிரணவ ரகசியத்தைப் பிரியமா யுபதே சித்து
மாணவா தனையை நீத்த மௌனசண் முகமெய்த் தேவே. 9

இலகிய பிலவங் கத்திற் கிசைந்தபங் குனிநாற் றேதி
நிலையுள சோம வாரம் நிறைசதுர்த் தசிபூ ரத்தில்
உலகனிற் றசமா றேகா லுறத்திரு முடிததாள் தன்னில்
மலமறச் சோதி யான மௌனசண் முகமெய்த் தேவே. 10

துதி.

எண்ணுதற் கரிய பரம்பொருள் வடிவா யிலகிவந் தடியவர் தமக்குக்
கண்ணிரு நடுவின் சுழிமுனை வழியாய்க் கதிர்மதி வாசியை யோட்டித்
தண்ணருட் சோதி தரிசன னந்தஞ் சதாநிலை யடையெனச் சாற்றுஞ்
சண்முக குருவைப் பணிந்தினி யடியேஞ் சடத்துயர்க் கோர்விடை யளிப்பாம்

முத்திநெறி யறியாத என்கிற சந்தம்.

அருள்கொழிக்குந் திருவுருவே யாணிமுத்தே மாணிக்கமே
இருளொழிக்கும் பரவெளியே இனபசுகப் பெருவாழ்வே
மருளளிக்கும் பாழ்மாய்கை மாற்றிமனந் தேற்றிடவே
ஒரு மொழியென் செவியினிலன் றோதியசண் முககுருவே. 1

ஈரிரண்டு நான்குதொகை யெண்ணறியாச் சேயேற்கு
ஓரிரண்டு நான்குபொரு ளோதியநற் றேசிகனே
ஆரிரண்டு கரத்தானை யகத்திருத்தும் மகத்துவத்தால்
காரிருண்ட வினைகடிந்த காரணசண் முககுருவே. 2

பாச்சியெனக் கூச்சலிடும் பாலகற்கும் பாலனுக்கும்
ஆச்சரியப் பரம்பொருளை யந்தரங்கத் தாலறியுஞ்
சூட்சவழி மோட்சநிலை சூட்டிமதி யூட்டிவைத்த
காட்சிமிகு மூர்ச்சிதமெய்க் கர்த்தா சண் முககுருவே. 3

நன்றறியேன் றீதறியேன் ஞானநிலை கலையறியேன்
இன்றறியேன் மேல்விளைவ தின்ன தெனத் தானறியேன்
சென்றறியேன் மூர்த்திதலந் தெரிசிக்க வறியேனை
அன்று வந்தாட் கொண்டவென தப்பாசண் முககுருவே. 4

ஆங்கார வாணவத்தை யகற்றியருள் மயமாகி
ஓங்காரப் பிரணவத்திற் குகந்தவனை மனந்தனிலே
நீங்காமல் பஜனை பண்ணிநித்தியவா னந்தமுற்றே
தூங்காமற் றூங்கெனவே சூட்டியசண் முககுருவே 5

உண்பதுவு முறங்குவது முவப்பதுவுஞ் சுகிப்பதுவும்
நண்புலகின் வாழ் வனைத்தும் நாடகமென் றேயுரைத்து
பண்புடைய சோதி வெளிப் பதிகாணும் படிகாட்டித்
தண்பருவத் தருள்புரிந்த தற்பரசண் முககுருவே 6

சரியைமுதற் கிரியையுடன் சார்யோக ஞானவழி
தெரிதவரா நிலையுணர்ந்து நீங்காத சாயுஜ்ய
புரியடைந்து சிவமயசற் பூரணமாய் வாழ்கவெனப்
பெரியதிரு வாக்களித்த பேதமில் சண் முககுருவே. 7

அஞ்ஞான விருட்காட்டி லாணவத்தா லலைவோர்க்கு
மெய்ஞ்ஞானப் பொருளுணர்த்தும் வித்தகனே புத்தமுதே
எஞ்ஞான்று மிகசுகத்தை யேற்றறியாப் பேற்றரசே
சுஞ்ஞான வருள்மயமாய்த் தோன்றியசண் முககுருவே. 8

அட்டவித நிட்டையில்நின் றறிவையறி வாலுணர்த்தி
வட்டமணி மேடையின்மேல் வாசிவழி யாய்ச்சேர்ந்து
வெட்டவெளிப் பட்டணத்தில் விளங்குகின்ற பெருவெளியைச்
சட்டமுடன் தரிசிக்கச் சாற்றியசண் முககுருவே 9

தன்மயமாய்த் தானிருந்து தன்னையறி வாலறிந்து
உன்மயமாய்ப் பரஞ்சோதி ஒளிவிளக்கைத் தரிசித்துச்
சின்மயமாய்த் தற்பரமாய்த் தெளிவமுதைத் தானருந்தி
வன்மலத்தை நீக்கெனவே வழுத்தியசண் முககுருவே. 10

காப்ப தேப்பவோ கந்தசாமி என்கிற சந்தம்.

பல்லவி.

சண்முகா நந்த குரு நாதா எந்தன்
சஞ்சலந்தீர்த் தருள்செய் போதா.

அநுபல்லவி.

கண்ணின் மணியே கருணைத் திருவுருவே
எண்ணிலா மெய்த்தவ ரின்ப மனமருவே. (ச)

சரணங்கள்.

1. மும்மலத்தைக் கடிந்த மூர்த்தி இரு
மூன்றையு மேகடந்த பூர்த்தி
தன்மயமா யெங்குந் தானகவே நின்றாய்
சுன்மன நாயேன் காணும்பொரு ளீதென்றாய் (ச)

2. ஆதிமூலக் காத்தை யோர்ந்து நிலே
ஆருதாரப் பதியைச் சார்ந்து
சோதி முனையிற் றுலங்கும் பரவெளியே
'சூக்குமத்தா லடைந்த தூய சுடரொளியே. (ச)

3. வாசி மேல் வாசி வழி யோட்டிப் பர
மானந்த வின்ப சுகங் காட்டி
தேசிகனுய் வந்து சேயேன் றனைக் காவாய்
தாசன் நாராயணன் பூசித்திடுங் தேவா. (ச)

வாவாவா வாவாவா வேலா என்கிற சந்தம்

நவரோஸ்—தாளம்—சாப்பு.

பல்லவி.

தானே தானுன சிவ போதா சிவ
சண்முகா நந்தகுரு நாதா

அநுபல்லவி.

தீனதயாளனே ஞானவைபோகனே—தன (தானே)

சரணங்கள்.

1. முத்திக்கு வித்தகனுய் வந்தவா என்
சித்தத்தி லானந்தம் தந்தவா
பத்தர்கள் நேசனே சத்திய வாசனே—தன (தானே)

2. வாசியிது பூசியெனக் காட்டியே—நிதம்
மாநிலா வமுர்தமெனக் கூட்டியே
தேசிக சீலனே திருமுடிபாலனே—தன (தானே)

3. எண்டிசையோர்கள் பணி பாதா நின்
தொண்டன்முறை செவிகேளாதா
அண்டினேன் நாதனே ஆதரிநீதனே—தன (தானே)

4. வேறோர் துணையிலேயென் ஐயனே—தாசன்
நாராயணன் துதி செய் மெய்யனே [(தானே).
மாருத போதனே மௌன விநோதனே—தன

சங்கரா சிவசங்கரா என்கிற சந்தம்.

இராகம்—பிலகம்சம். தாளம்—ஆதி.

பல்லவி.

நாதனே குரு நாதனே உந்தன்

அநுபல்லவி.

பாதமே கதியெனவே ஓதினே நிதமுனையே (நாதனே)

சரணங்கள்.

1. வேதனே ஞான போதனே எங்குஞ்
சோதிமயமான திருச் சேவை தர நீ வருவாய் (நாதனே)

2. கண்மணி தூய வெண்மணி என்றும்
சண்முக நாதனு யெங்குந் தன்மயமாகவே நின்ற (நாதனே)

3. வாடினேன் உனைத் தேடினேன் நிதம்
பாடிடுமடியார் வினை யோடிட வருள் புரியும் (நாதனே)

4. பஞ்சைமே லின்னம் வஞ்சமேன் உனைக்
கெஞ்சிய மும்மைந்தனைநீ ரஞ்சலெனக்கொஞ்சம்பாரும் (நா)

5. வாருமே இன்பந் தாருமே சிவ
நாராயண தாசன் நிதம் சீராய்ப்பணியுஞ் சண்முக (நாத)

இராகம்—மாஞ்சி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

குருவே அருள் தரவே இது
தருணங் கருணை புரியும் சண்முக

அநுபல்லவி.

ஒருமொழியாலென் னிருவினை நீக்கித்
திருவடிதாருந் திருமுடி சண்முக (குருவே)

சரணங்கள்.

1. இன்னந் தய விலையா என
தண்ணலே நின்னடி தன்னையே நம்பினேன்—இன்னந் தய விலையா
முன்ன வினையெலா மென்னை யணுகாமல்
பின்னம தாக்கிய தன்மய சண்முக. (குருவே)

170471.

2. அடியேன் நெடு நாளாய்—இந்த
அவனியிற் பிறந் தலையுங்கிள்ளைநா—னடியேன் நெடுநாளாய்த்
திடமதாய்த் திருத் தடாகந் தனிலென்
மடமை நீக்கிய மௌன சண்முக. (குருவே)

3. தஞ்சமென வந்தோர் தனை
அஞ்சாதீ ரென வந் தாதரித்த ஐயா—தஞ்சமென வந்தோர்
கெஞ்சும் நாராயண தாசன் பிறப்பற
வஞ்சமிலாமல்வந் தாண்ட சண்முக. (குருவே)

O26'.417
N12

இராகம்—காம்போதி—தாளம்—ஆதி.

கண்ணிகள்.

சண்முகா நந்த தேவா குருநாதா—வுந்தன்
சரண மண்டினேன் சாமி குருநாதா 1

எண்ணருந் தவத்தோனே குருநாதா—இந்த
ஏழைக் கிரங்கு மையா குருநாதா 2

பந்தத்தி லாழ்ந்த வென்னை குருநாதா—அன்று
பாதுகாத் தாண்டவனே குருநாதா. 3

சின்மய தற்சொருபா குருநாதா—இன்று
தேடி வருந்து கின்றேன் குருநாதா. 4

கல்லா மடையனுக்கு குருநாதா—அருட்
கருணை கடா க்ஷந்தந்த குருநாதா. 5

நன்னெறி நானடைய குருநாதா—சிவ
ரகசியஞ் சொன்னவையா குருநாதா. 6

நின்னடியார் மனத்தில் குருநாதா—என்றும்
நீங்கா நிராமய மே குருநாதா. 7

சரிகை கிரியை யோகம் குருநாதா—ஞான
சாஸ்வத நிலே போதா குருநாதா. 8

அத்வைத மெய்ப் பொருளே குருநாதா—பர
மானந்த நிஷ்களமே குருநாதா. 9

மூலா க்ஷர முதலாய் குருநாதா
முன்ன க்ஷர முரைத்த குருநாதா. 10

பேரா னந்தங் காட்டிய குருநாதா—இந்தப்
பே ருதவிக் கென்செய்வேன் குருநாதா. 11

சிவ நாராயண தாசன் குருநாதா
சிந்திக்கும் நல்வசந்தா குருநாதா. 12

நீலமயூர மீதிலோலா சிங்காரனே என்கிற சந்தம்.

இராகம்—தேசிகத்தோடி—தாளம்—ஆதி.

பல்லவி.

நாதா சண்முககுரு வேதா வைபோகனே
ஆதரவாக நாடினேன் அடியேனும் நான் (ஆதரவாக நாடினேன்.)

அநுபல்லவி.

பூதல மீதுன் பாதம் பணிந்தேன்
நீதனே நின்னை ஒதித் துதித்தேன். (நாதா)

சரணங்கள்.

அன்னை கருக் குழியி லென்னைப் பிறவா நெறி
தன்மையளிக்க வந்தவா—சிவாவெனுந் தன்மையளிக்க வந்தவா
இன்னிலந் தன்னில் நின்னிருதாளை
எண்ணினேன் ஞானப் பொன்னடி தாராய் (நா) 1

வாசி மலர்கொண் டுன்னைப்பூ சித்தனுதினம்
நேசித்திருந்தே னையனே—அனுதினம்—நேசித்திருந்தேனையனே
வாசமிகுந்திரு வோசை முழங்கத்
தேசிகனுக வந்தாசி புரிந்த (நா) 2

மைந்தன் நாராயண தாசன் பணி பாதனே
எந்தனைக் காத்த வேதனே—ஞானபோதனே—எந்தனைக்காத்த போதனே
உந்தனடியார் பந்த மகற்ற
இந்த வுலகில் வந்த குருவே. (நா) 3

மங்களம்.

இராகம்—வாகதீஸ்பரி. தாளம்—ஆதி.

பல்லவி.

நாதா சண்முககுரு நாதா மங்களம்

அநுபல்லவி.

நாதா மங்களம் குருநாதா மங்களம் (நாதா)

சரணம்.

1. இத்தரை மீதினின் பத்தர் வினையகற்ற
சித்துரு வாயுதித்த தேவா மங்களம் (நாதா)

2. மாற்றிலாப் பொன்மணியைப் போற்றும் வழியீதெனத்
தோற்ற வெனக்குரைத்த ஜோதி மங்களம் (நாதா)

3. ஆசையிலாமல் சிவ பூசை புரிந்திடும்
தாசன் நாராயணன் பூசித மங்களம் (நாதா)

Q26:417
5112
சென்னை-600 008.
120471

முற்றிற்று.

குருநாதன்றுணை.